மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : இல்லை

நெசவாளர் சங்கங்களில் தேங்கியுள்ள துணிக.

*வினா எண். 336—திரு. சு. பழனிசாமி: மாண்புமிகு கைத்தறி, பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

நெசவாளர் சங்கங்களில் தேங்கியுள்ள ஜவுளிகளை கொள்முதல் செய்ய செயற் குறிப்புகள் உண்டா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : இம்மாநிலத்தில் உள்ள பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் ஜவுளிகளில் சுமார் 50 சத வீதம் மதிப்புடைய துணிகளை மேற்படி சங்கங்களே நேரடியாக பொதுமக்களுக்கும், வியாபாரிகளுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் விற்பனை செய்கின்றன. மீதமுள்ள 50 சத வீதம் சரக்குகளை ''கோ-ஆப்டெக்ஸ்'' நிறுவனம் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்து தனது விற்பனை நிலையங்கள் மூலமாகவும், ஏஜெண்டுகள் மூலமாகவும் விற்பனை செய்கின்றது.

Handloom Industrial Estates at Narikkalpatti.

*Q. No. 337—THIRU S. M. VASAN : Will the Hon. the Minister for Handlooms and Textiles be pleased to state—

(*a*) whether a large section of the weavers community at Narikkalpatti in Palani constituency have been urging the Government to sta a Handloom Industrial Estate and Training Centre ; and

(*b*) if so, the action taken thereon ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : (அ) ஆம்.

(ஆ) தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஒன்றினை நரிக்கல்பட்டி கிராமத்தில் ஆரம்பிப்பதற்காக கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரிடமிருந்து ஒரு செயற்குறிப்பு பெறப்பட்டு அது அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆனால் அங்கு பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிப்பதற்கானசெயற் குறிப்பு அரசிடம் இல்லை.

[1979 மார்ச் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(3) அறிவிப்புகள்.

(அ) மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் 'தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 12/1979)' திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றுள்ளது என்று மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது.

(1) தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) முதலமைச்சர் தம் வினாக்களுக்குப் பதிலளிப்பது குறித்து.

திரு. அ. ரகுமான்கான்: சார், பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டபோது, முதலமைச்சரவர்களின் வினாக்களுக்கு பதில் சொல்லுவார்கள்; இந்த மன்றத்தில் பதில் அளிக்கப்படும் என்று சொன்னீர்கள். ஆனால் இன்றைக்குக் கூட முதலமைச்சர் கேள்வி வரவில்லை. இது இப்படித் தொடர்ந்துகொண்டே போகிறது. இதற்கு இறுதியாக தாங்கள் ஒரு பதிலைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திங்கட்கிழமையிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கேள்விகள் இடம் பெறும்.

திரு. மு. கருணாநிதி: திங்கட்கிழமை என்றால் 12-ந் தேதி என்று அறிகிறேன். 12-ந் தேதி வினாப் பட்டியல் எங்களுக்கு வந்திருக்கிறது. அதிலும் இடம் பெறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சப்ளிமெண்டரி லிஸ்டில் கொடுக்கப்படும்.